**ஆகஸ்ட் – 08**

# TNPSC துளிகள்

- லலித் கலா நிறுவனமானது (Lalit Kala Akademi) தனது 65வது தொடக்க நிறுவனத்தைப் புது தில்லியில் அனுசரித்தது. இந்த நிறுவனம் தேசியக் கலை நிறுவனம் என்றும் அழைக்கப்படுகின்றது. மத்திய கலாச்சார மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் பிரஹலாத் சிங் படேல் இத்தின விழாக் கொண்டாட்டங்களைத் தொடங்கி வைத்தார்.
- போர்ப்ஸ் அறிக்கையின்படி, 2019 ஆம் ஆண்டின் அதிக ஊதியம் பெறும் தடகள வீராங்கனை 23 முறை கிராண்ட் ஸ்லாம் சாம்பியன்ஷிப் பட்டம் வென்ற செரீனா வில்லியம்ஸ் ஆவார்.
    - ஜப்பானிய வீராங்கனையான நோமி ஒசாகாவின் சமீபத்திய அமெரிக்க ஓபன் மற்றும் ஆஸ்திரேலிய ஓபன் ஆகியவற்றில் பெற்ற வெற்றிகள் அவரை இரண்டாவது இடத்திற்குத் தள்ளியது.
- அமெரிக்காவானது “பணத்தை ஏமாற்றும் நாடாக” சீனாவைத் தேர்ந்தெடுத்துள்ளது. இதன் மூலம் டொனால்டு டிரம்பின் தேர்தல் பிரச்சார வாக்குறுதி நிறைவேறியது.
    - சர்வதேச வர்த்தகத்தில் நியாயமற்ற போட்டியின் பயன்களைப் பெறுவதற்காக சீனா தனது நாணயத்தைக் கையாளுவதாக அந்நாட்டின் மீது அமெரிக்கா குற்றம் சாட்டியது.

# தேசியச் செய்திகள்

## ஜம்மு காஷ்மீர் மறுசீரமைப்பு மசோதா, 2019

- ஜம்மு காஷ்மீர் மறுசீரமைப்பு மசோதா, 2019 ஆனது 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 05 அன்று மாநிலங்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டு, அன்றே நிறைவேற்றப்பட்டது. இம்மசோதா 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 06 அன்று மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.
- இம்மசோதா ஜம்மு காஷ்மீர் மாநிலத்தைப் பின்வருமாறு மறுசீரமைக்க வழிவகை செய்கின்றது.
    - சட்ட சபையுடன் கூடிய ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசம்
    - சட்ட சபை இல்லாமல் லடாக் ஒன்றியப் பிரதேசம் (முன்பு 4 இடங்கள்)
- லடாக் ஒன்றியப் பிரதேசமானது கார்கில் மற்றும் லேஹ் ஆகிய மாவட்டங்களை மட்டுமே கொண்டிருக்கும். பிற பகுதிகள் ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசத்தைச் சார்ந்தவையாகும்.
- மக்களவையானது ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசத்தில் இருந்து 4 இடங்களையும் லடாக்கானது 1 இடத்தையும் கொண்டிருக்கும்.

### *துணை நிலை ஆளுநர்*

- இந்த இரண்டு ஒன்றியப் பிரதேசங்களும் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்ட ஆட்சியாளரின் மூலம் குடியரசுத் தலைவரால் நிர்வகிக்கப்பட விருக்கின்றது. இந்த ஆட்சியாளர் துணை நிலை ஆளுநர் (LG - Lieutenant Governor) என்றறியப்படுகின்றார்.

### *ஜம்மு காஷ்மீர் சட்ட சபை*

- இந்த மசோதா ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசச் சட்ட சபைக்கு கூடுதலாக 7

இடங்களுடன் சேர்த்து மொத்தம் 114 இடங்கள் அமைக்க வழிவகை செய்கின்றது (முன்னதாக 107 இடங்கள்).

- ❖ இவற்றில் சில பகுதிகள் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பின் கீழ் உள்ள காஷ்மீரில் இருப்பதன் காரணமாக 24 இடங்கள் காலியாக இருக்கும். மீதமுள்ள 90 இடங்கள் ஜம்மு காஷ்மீருக்கு அளிக்கப்படும்.
- ❖ சட்ட சபையில் பெண்கள் போதிய அளவில் பிரதிநிதித்துவம் பெறாமல் இருந்தால், அச்சபையில் பெண்களுக்கு பிரதிநிதித்துவம் அளிப்பதற்காக இரண்டு உறுப்பினர்களை துணை நிலை ஆளுநர் நியமிக்கலாம்.
- ❖ பட்டியலிடப்பட்ட இனத்தவர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் ஆகியோரின் மக்கள் தொகை எண்ணிக்கைக்கு ஏற்ப, அவர்களுக்கு சட்ட சபை இடங்கள் ஒதுக்கப்படும்.
- ❖ இந்தச் சட்ட சபையானது 5 ஆண்டுகள் பதவிக் காலத்தைக் கொண்டிருக்கும். துணை நிலை ஆளுநர் குறைந்தபட்சம் 6 மாதங்களுக்கு ஒரு முறையாவது சட்ட சபையைக் கட்டாயம் கூட்ட வேண்டும்.
- ❖ இந்த சட்ட சபை பின்வருபவை தொடர்பாக ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசத்தின் எந்தவொரு பகுதிக்காகவும் சட்டங்களை இயற்றலாம்.
    - ○ “காவல் துறை” மற்றும் “பொது அமைதி” தவிர இந்திய அரசியலமைப்பின் மாநிலப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விவகாரங்கள் மீதும்.
    - ○ ஒன்றியப் பிரதேசங்களுக்குப் பொருந்துகின்ற பொதுப் பட்டியலில் உள்ள எந்தவொரு விவகாரங்கள் மீதும்.
    - ○ மேலும், ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசத்திற்கான எந்தவொரு விவகாரங்கள் தொடர்பாக எந்த சட்டங்களையும் இயற்ற நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது.

***அமைச்சரவைக் குழு***

- ❖ சட்டசபையின் மொத்த உறுப்பினர்களில் 10 சதவிகிதத்திற்கு மிகாமல் அமைச்சர்களைக் கொண்ட குழு (அமைச்சரவைக் குழு) ஒன்று இருக்கும்.
- ❖ இந்த அமைச்சரவைக் குழுவானது சட்டம் இயற்றுவதற்கு சட்ட சபைக்கு உள்ள அதிகாரங்கள் குறித்து துணை நிலை ஆளுநருக்கு அறிவுரை வழங்கும்.
- ❖ அமைச்சரவைக் குழுவின் அனைத்து முடிவுகளையும் ஒன்றியப் பிரதேச முதல்வர் துணை நிலை ஆளுநருக்கு தெரிவிப்பார்.

***உயர் நீதிமன்றம்***

- ❖ ஜம்மு காஷ்மீர் உயர் நீதிமன்றமானது லடாக் மற்றும் ஜம்மு காஷ்மீர் ஆகிய ஒன்றியப் பிரதேசங்களுக்கான ஒரு பொதுவான உயர் நீதிமன்றமாகச் செயல்படும்.
- ❖ மேலும் ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசமானது சட்ட ரீதியிலான அறிவுரைகளை வழங்குவதற்காக அதன் ஒன்றியப் பிரதேச அரசிற்கு ஒரு தலைமை வழக்குரைஞரைக் கொண்டிருக்கும்.

***சட்டமன்ற மேல்சபை***

- ❖ ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் சட்டமன்ற மேல்சபையானது ஒழிக்கப்படும். இவ்வாறு ஒழிக்கப்பட்டால் மேல்சபையில் நிலுவையில் உள்ள அனைத்து மசோதாக்களும் காலாவதியாகிவிடும்.

***ஜம்மு காஷ்மீரின் பழைய மாநிலச் சட்டங்கள்***

- ❖ ஜம்மு காஷ்மீரின் மாநிலம் சார்ந்த 153 சட்டங்கள் நீக்கப்படுகின்றன.
- ❖ 166 மாநிலச் சட்டங்கள் தொடர்ந்து செயல்பாட்டில் இருக்கும். 7 சட்டங்கள் சில

திருத்தங்களுடன் ஜம்மு காஷ்மீருக்குப் பொருந்தும்.

- ஜம்மு காஷ்மீரில் நிரந்தர குடியிருப்பு வாசிகள் அல்லாத மக்களுக்கு "நிலத்தை குத்தகைக்கு" வழங்குவது மீதான தடையை நீக்குதல் உள்ளிட்ட திருத்தங்கள் இதில் உள்ளடங்கும்.

***இதர அம்சங்கள்***

- பின்வரும் பிரச்சனைகளுக்காக ஆலோசனைக் குழுக்களை மத்திய அரசு அமைக்கும்.
    - மின்சாரம் மற்றும் நீர் ஆகியவற்றின் உற்பத்தி மற்றும் விநியோகம்
    - ஜம்மு காஷ்மீர் மாநில நிதியியல் கழகம்
    - இரண்டு ஒன்றியப் பிரதேசங்களுக்கிடையே ஜம்மு காஷ்மீர் மாநிலக் கழகங்களின் சொத்துகள் மற்றும் நிதி சார்ந்த பொறுப்புகள் ஆகியவற்றைப் பிரித்துக் கொடுத்தல்.

## விண்வெளிச் சொத்துகளைப் பாதுகாத்தல்

- விண்வெளிக் கழிவுகளைக் கண்காணிக்கவும் தன்னுடைய விண்வெளிப் பொருட்களைப் பாதுகாக்கவும் தனக்குச் சொந்தமான ஒரு அமைப்பை உருவாக்குவதற்குத் தொலைநோக்கிகள் மற்றும் ரேடார் ஆகியவற்றின் அமைப்பை இஸ்ரோ அமைத்துக் கொண்டிருக்கின்றது.
- தற்பொழுது இஸ்ரோவானது விண்வெளியில் தொலைத் தொடர்பு, கள இயக்கம் மற்றும் கண்காணிப்புச் செயற்கைக் கோள்கள் உள்ளிட்ட செயல்பாட்டில் உள்ள 50 செயற்கைக் கோள்களைக் கொண்டுள்ளது.
- இது பின்வருவனவற்றிற்காக பொதுவெளியில் கிடைக்கக்கூடிய மற்றும் துல்லியத் தன்மையற்ற தரவு ஆகியவற்றிற்கு நோராாடைச் (NORAD/ North America Aerospace Defense Command - வட அமெரிக்க விண்வெளி பாதுகாப்பு நிலையம்) சார்ந்திருக்கின்றது.
    - விண்வெளிக் கழிவுகளைத் தொடர்ந்து கண்காணித்தல்
    - செயல்பாட்டில் உள்ள மற்றும் செயல்பாட்டில் இல்லாத நமது செயற்கைக் கோள்களைக் கண்காணித்தல்.
- விண்வெளிச் சூழ்நிலை விழிப்புணர்வு கட்டுப்பாட்டு மையத்திற்கு பெங்களூருவில் அடிக்கல் நாட்டப்பட்டது.
- நாட்டின் நான்கு திசைகளிலும் தொலைநோக்கிகள் மற்றும் ரேடார்கள் ஆகியவற்றை இஸ்ரோ அமைக்கவிருக்கின்றது.
    - திருவனந்தபுரம், அபு மலை (இராஜஸ்தான்), நாட்டின் வடக்கு கோடி ஆகியவற்றில் தொலைநோக்கி
    - வடகிழக்கில் ஒரு ரேடார்.
- இந்த அமைப்பானது விண்வெளிச் சூழ்நிலை விழிப்புணர்வு மற்றும் மேலாண்மை இயக்குனரகத்தின் கீழ் அமைக்கப்பட விருக்கின்றது.

## யானைகள் கணக்கெடுப்பு

- இந்தியாவில் உள்ள யானைகளின் எண்ணிக்கை குறித்து மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- 2017 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட யானைகள் கணக்கெடுப்பின் படி இந்தியாவில் உள்ள யானைகளின் எண்ணிக்கையானது 29,694 ஆக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

- நாட்டின் தெற்குப் பகுதியானது 14,612 யானைகளையும் அதற்கு அடுத்து வடக்குப் பகுதியானது 10,139 யானைகளையும் கொண்டுள்ளது.
- புலிகளின் கணக்கெடுப்பு 4 ஆண்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படும் அதே வேளையில் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை யானைகள் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

### திறனுள்ள போக்குவரத்துக் கட்டுப்பாடு – சண்டிகர்

- நாட்டின் இதே வகையைச் சேர்ந்த ஒரு முதலாவது முன்னெடுப்பான, சண்டிகர் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவர்களால் வடிவமைக்கப்பட்ட முப்பரிமாண திறன் வாய்ந்த போக்குவரத்துச் சமிக்ஞையை மொஹாலி போக்குவரத்துக் காவல் துறை அறிமுகப்படுத்தியுள்ளது.
- போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதற்கான முக்கியக் காரணங்களில் ஒன்று சாலைகளின் மையத்தில் பொருத்தப்பட்டுள்ள போக்குவரத்து சமிக்ஞை கடிகைகளின் திறனற்றச் செயல்பாடாகும்.
- "இன்டெலைட்ஸ்" என்று அழைக்கப்படும் இந்தக் கம்பியில்லா அமைப்பு சிவப்பு, மஞ்சள் மற்றும் பச்சை விளக்குகளின் நேரங்களை மாற்றியமைப்பதற்கு இயங்குநிலை சமிக்ஞை கட்டுப்பாட்டுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றது.
- சாலைகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலுக்கு ஏற்ற படி சமிக்ஞை நேரங்கள் மாற்றியமைக்கப் படுகின்றன.
- இது நிகழ்நேரப் போக்குவரத்து நெரிசல் குறித்தத் தகவலைச் சேகரிப்பதற்காக சிசிடிவி கேமராக்களைப் பயன்படுத்துகின்றது.

## சுற்றுச்சூழல் செய்திகள்

### உலக தண்ணீர்ப் பிரச்சினை

- உலக வளங்கள் நிறுவனத்தின் (WRI - World Resources Institute) புதிய தரவின்படி, உலக மக்கள் தொகையில் நான்கில் ஒரு பகுதியினர் (1/4) மிகப் பெரிய தண்ணீர்ப் பிரச்சினையை எதிர் கொண்டிருக்கின்றனர். இவர்களில் மிக அதிக எண்ணிக்கையிலான மக்கள் இந்தியாவில் வாழ்கின்றனர்.
- ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக மொத்த தண்ணீர் விநியோகத்தில் 80 சதவிகிதத்திற்கும் மேலான நீரைப் பாசன விவசாயம், தொழிற்சாலைகள் மற்றும் நகராட்சிகள் ஆகியவை பயன்படுத்துகின்றன.
- தற்பொழுதுள்ள நீர் விநியோகத்தில் 80 சதவிகிதம் அல்லது அதற்கும் மேலான நீரை 17 நாடுகள் பயன்படுத்துகின்றன. இந்த 17 நாடுகளில் இந்தியா 13-வது இடத்தில் இருக்கின்றது.
- 1990 மற்றும் 2014 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் வட இந்தியாவில் உள்ள நிலத்தடி நீர்மட்டங்கள் ஒரு ஆண்டுக்கு 8 சதவிகிதத்திற்கும் மேல் குறைந்து விட்டன.
- அக்குவாடெக்ட் (Aqueduct) என்ற கூறானது WRIயினால் பயன்படுத்தப்படுகின்றது. இந்த நிறுவனம் "தண்ணீர் அபாய மதிப்பெண்களின்" அடிப்படையில் நாடுகளை தரவரிசைப் படுத்துகின்றது. இந்த மதிப்பெண்கள் தண்ணீர் அபாயத்தின் 13 கூறுகளைப் பயன்படுத்தி நிர்ணயிக்கப்படுகின்றன.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## விண்வெளி அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றில் விக்ரம் சாராபாய் இதழியல் விருது

- இந்திய விண்வெளித் திட்டத்தின் தந்தையான டாக்டர் விக்ரம் சாராபாயின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் இதழியல் துறையில் 2 வகையான விருதுகளை ஏற்படுத்தியுள்ளது.
- இந்த விருதானது விண்வெளி அறிவியல், பயன்பாடுகள் மற்றும் ஆராய்ச்சி ஆகிய துறைகளில் தீவிரமாகப் பங்களித்த இதழியலாளர்களை அங்கீகரித்து கௌரவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதழியல் துறையில் சிறந்த அனுபவமுள்ள அனைத்து இந்தியர்களும் இந்த விருதுக்கு விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவர்களாவர்.
- 2019 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் அச்சு ஊடகங்களின் இதழியலாளர்கள் அல்லது பகுதி நேரப் பணியாளர்கள் ஆகியோர்களால் பிரசுரிக்கப்பட்ட கட்டுரைகளும் இந்த விருதுக்குப் பரிசீலிக்கப்படும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★